# தேசபக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 096 ★07.08.2026 ★தமிழ் நாளிதழ் ★வெள்ளிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:096 ★07.08.2026 ★TamilDaily ★Friday ★Page-4 ★Price-₹5/- Chennai





பாரம்பரிய மலை மாடுகளை அழிக்கும் வனத்துறை:

## சின்னமனூர் வனச்சரக அலுவலகம் முன்பாக கொட்டும் மழையிலும் மாடு மேய்க்கும் தொழிலாளர்கள் தர்ணா போராட்டம்

### மாவட்ட ஆட்சியர் மற்றும் DFO உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தேனி மாவட்டம் சின்னமனூர் ஒன்றியத்திற்குட்பட்ட எரசக்கநாயக்கனூர், புத்தம்பட்டி மற்றும் பூசாரிகவுண்டன்பட்டி ஆகிய கிராம பகுதிகளை சேர்ந்த கர்ணல் ஜான் பென்னிகுவிக் பாரம்பரிய மலை மாடுகள் வளர்ப்போர் சங்கத்தினர், சின்னமனூர் வனச்சரகம் அலுவலகம் முன்பாக கவனஈர்ப்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். தலைமுறை தலைமுறையாக, சுமார் ஐந்து தலைமுறைகளாக தங்கள் பாரம்பரிய மலை மாடுகளை வனப்பகுதிகளில் மேய்ச்சலுக்கு கொண்டு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். கடந்து போன காலங்களில் இப்பகுதிகளில்10,000க்கும் மேற்பட்ட மலை மாடுகள் மேய்ச்சலுக்கு சென்று வந்தன. இதனால் இயற்கை உரங்கள் கிடைக்கப்பெற்று, அப்பகுதி விவசாய நிலங்களின் விளைச்சலும் செழிப்பாக இருந்தது. அன்றைய காலகட்டங்களில் வனத்துறையினரும் முறைப்படி மேய்ச்சலுக்கான அனுமதி அட்டைகளை (லைசன்ஸ்) வழங்கி வந்தனர். ஆனால் தற்காலத்தில் விவசாய நிலங்களின் வீழ்ச்சி மற்றும் பல்வேறு காரணங்களால் மலை மாடுகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து, தற்போது வெறும் 500 மாடுகள் மட்டுமே மேய்ச்சலுக்கு செல்லும் நிலை உருவாகியுள்ளது.

துரதிர்ஷ்டவசமாக, எஞ்சியிருக்கும் இந்த 500 மலை மாடுகளையும் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லவிடாமல் வனத்துறையினர் கடுமையாக தடுத்து நிறுத்தி கிடுக்குப்பிடி போட்டு வருகின்றனர். கடந்த 2021ஆம் ஆண்டோடு மலை மாடுகளுக்கான மேய்ச்சல் லைசன்ஸ் காலம் நிறைவடைந்த நிலையில், அதன்பின்னர் தற்போது வரை புதிய லைசன்ஸ் வழங்க வனத்துறை அதிகாரிகள் முற்றிலுமாக மறுத்து வருகின்றனர். தமிழகத்தின் பாரம்பரிய வீர விளையாட்டுகளான ஜல்லிக்கட்டு, ரேக்ளா பந்தயம் போன்றவற்றில் களமிறக்கப்படும் வீரியமிக்க இந்த மலை மாடுகள், மேய்ச்சல் இன்றி அழியும் அபாயத்திற்கு வனத்துறையினரின் இந்த பிடிவாதப் போக்குதான் முதன்மை காரணமாக அமைகிறது. இந்த சூழலில், ஆகஸ்ட் 6ஆம் தேதி மாலை 4 மணி முதல் 6 மணி வரை வனச்சரக அலுவலகம் முன்பாக தொழிலாளர்கள் குடும்பத்துடன் தர்ணாவில் ஈடுபட்டபோதிலும், அங்கிருந்த வனத்துறை அதிகாரிகள் எவரும் நேரில் வந்து அவர்களின் நியாயமான கோரிக்கைகளை கேட்கவோ, பேச்சுவார்த்தை நடத்தவோ முன்வரவில்லை. இதேவேளையில், சின்னமனூர் வனச்சரக அலுவலகத்தின் செயல்பாடானது பத்திரிகையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் முற்றிலும் எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது. இது ஒரு மக்களுக்கான அரசு அலுவலகமா அல்லது வனத்திற்குள்அமைந்த தனித்துவ அதிகார மையமா என்ற பெரிய கேள்விக்குறி எழுந்துள்ளது. பாமர மக்களோ அல்லது செய்தி சேகரிக்க செல்லும் பத்திரிகையாளர்களோ நேரடியாக சென்று தங்களது புகார்களை தெரிவிக்கவோ அல்லது தகவல்களை பெறவோ முடியாத சூழலே இங்கு நிலவுகிறது. 'நாங்கள் சொல்வதே சட்டம்' என்ற போக்கில் செயல்படும் இவ்வலுவலகத்தினர், தங்களது எல்லைக்குட்பட்ட வனப்பகுதிகளில் நடைபெறும் மரக்கடத்தல், மரங்களை வெட்டுதல் மற்றும் சமூக விரோத செயல்கள் குறித்த தகவல்களை எப்போதும் மூடி மறைப்பதிலேயே குறியாக உள்ளனர். செய்தியாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் கேள்வி எழுப்பினாலும், "பார்த்து சொல்கிறோம்" என மழுப்பலான பதிலையே கூறித் தட்டிகழிக்கின்றனர். அன்றைய தினம் நடைபெற்ற தர்ணா போராட்டம் குறித்து தகவல் கேட்கத் தொடர்பு கொண்ட செய்தியாளர்களிடம் தொலைபேசியை கூட சரியாக கையாளாமல் அலட்சிய போக்குடன் பதிலளித்துள்ளனர். வன உயிரினங்களையும், பாரம்பரிய கால்நடைகளையும் பாதுகாக்க வேண்டிய வனத்துறையினரே பல்வேறு உயிரினங்களின் அழிவிற்கும் தொழிலாளர்களின் வாழ்வாதார சிதைவிற்கும் மூலக்காரணமாக இருப்பது வேதனையளிக்கிறது. எனவே, இந்த விவகாரத்தில் தேனி மாவட்ட ஆட்சியரும், மாவட்ட வன அலுவலரும் (DFO) உடனடியாக நேரடியாக தலையிட்டு ஆய்வு செய்ய வேண்டும். எவ்வித இடையூறும் இன்றி பாரம்பரிய மலை மாடுகளை மேய்ப்பதற்கு தேவையான நிரந்தர மேய்ச்சல் லைசன்ஸை உடனடியாக வழங்கி, சம்பந்தப்பட்ட சங்கத்தினரின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

தொகுதி மறுசீரமைப்பு:

## ஆக.8ல் தமிழக எம்.பி.க்களுடன் முதல்வர் விஜய் ஆலோசிக்க ஏற்பாடு

தொகுதி மறுசீரமைப்பு குறித்து வரும் 8ம் தேதி தமிழகத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முதல்வர் விஜய் ஆலோசிக்கவுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: ஒன்றிய அரசு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள தொகுதி மறுசீரமைப்பு பணிகள் குறித்து தமிழக முதல்வர் விஜய் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலந்தாலோசனைக் கூட்டத்தை தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

ஒன்றிய அரசு, தொகுதிகளை மறுவரையறை செய்ய உத்தேசித்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், முதல்வர் விஜய் தலைமையில், ஒன்றிய அரசால் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள தொகுதி மறுவரையறைப் பணிகள்



மற்றும் அதனால் தமிழகத்துக்கு ஏற்படும் தாக்கங்கள் குறித்து, தமிழகத்தை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் (மக்களவை மற்றும்மாநிலங்களவை) கலந்தாய்வுக் கூட்டம் ஆக.8 (சனிக்கிழமை) அன்று பிற்பகல் 3.00 மணிக்கு, சென்னை, சேப்பாக்கம், கலைவாணர் அரங்கத்தின் கூட்டரங்கில் (3ஆம் தளம்) நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக்கூட்டத்துக்கான அழைப்பிதழ் புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் மூலம் தமிழகத்தை சேர்ந்த அனைத்து மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாநில செயற்குழு கூட்டம்

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற தென்காசி மாவட்டக் கிளை சார்பில் மாநில செயற்குழு கூட்டம் தென்காசி அருகே உள்ள மேலகரத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு செயற்குழு உறுப்பினர் சிவகுமார் தலைமை தாங்கினார்.




மாவட்டச்செயலாளர் கனகராஜ் வரவேற்று பேசினார்.

இம்மாவட்டச் செயற்குழுவில் இயக்கத்தின் பொது செயலாளர் முனைவர் நா. சண்முகநாதன் கலந்து கொண்டு இயக்கச் செயல்பாடுகள் மற்றும் பொறுப்பாளர்கள் கடைமைகள் பற்றி சிறப்புரையாற்றினார். இயக்கத்தின் மாநிலச் செயலாளர் நல்லாசிரியர் ராஜேந்திரன் கலந்து கொண்டு இயக்கத்தில் நடைபெற்ற பணிகள் குறித்து விரிவாக பேசினார்.

மாவட்டச் செயற்குழுவில் மாவட்டத்தலைவர் பொறுப்பிற்கு ஆ. சிவகுமார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மாவட்டத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆ. சிவகுமாருக்கு பாராட்டு தெரிவிக்கப் பட்டதுமக்கள்தொகை கணக்கெடுப்பில் ஆசிரியர்கள் பணியாற்றும் வேளையில் கல்வித்திரு விழாப் போட்டிகளை நடத்துவது ஆசிரியர்களின் கற்பித்தல் பணியைப் பாதிக்கிறது. எனவே மாணவர்களின் நலன் கருதி கலைத்திரு விழா போட்டிகள் நடைபெறும் நாட்களை தள்ளி வைத்திட வேண்டும். டி.டி.டி.ஏ., ஆர்.சி. மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணியேற்று பல வருடங்களாக ஊதியம் பெறாமல் உள்ள ஆசிரியர்களுக்கு பணி ஒப்புதல் வழங்கி ஊதியம் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். டெட் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு காலதாமதமில்லாமல் உண்மைத்தன்மைச்சான்றிதழ் வழங்கிட வேண்டும்.தலைமையாசிரியர் பணியிடம் காலிப்பணியிடமாக இருக்கும் பள்ளிகளில் பாரபட்சமில்லாமல் ஆசிரியர், மாணவர் நலனை கருத்தில் கொண்டு மாற்றுப் பணி வழங்கிட வேண்டும்.

ஊதிய உயர்வு பட்டியலில் 45வது கலத்தைக் கடந்த ஆசிரியர்களுக்கு தமிழக அரசு விரைந்து புதிய ஊதிய உயர்வு பட்டியல் வழங்கிட வேண்டும். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.கூட்டத்தில் அனைத்து ஒன்றியங்களைச் சார்ந்த செயலாளர்கள் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர். மாவட்ட இளைஞரணி செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார்.



## அமர் சேவா சங்கத்தில் ‘சங்கம் உத்சவ்’ பணியாளர்கள் தின விழா

அமர் சேவா சங்கத்தில் 'சங்கம் உத்சவ்' பணியாளர்கள் தின விழா கோலாகலமாக நடைபெற்றது

தென்காசி மாவட்டம் ஆய்க்குடியில் அமைந்துள்ள அமர் சேவா சங்கத்தில், இந்த ஆண்டிற்கான பணியாளர்கள் தின விழா 'சங்கம் உத்சவ்' என்ற பெயரில் கோலாகலமாக நடைபெற்றது.

விழாவின் தொடக்கமாக கிராமம் சார்ந்த மறுவாழ்வு பணியாளர்களால் கடவுள் வாழ்த்து பாடப்பட்டது. தொடர்ந்து, அமர்சேவா சங்கத்தின் CPO திருமதி சுப்புலட்சுமி அவர்கள் வரவேற்புரையாற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

அமர் சேவா சங்கத்தின் நிறுவனத் தலைவர் திரு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் மற்றும் சங்கத்தின் இணைத் தலைவரும் செயலாளருமான திரு. எஸ். சங்கர்ராமன் அவர்கள் பணியாளர்களின் அர்ப்பணிப்பு, சேவை மனப்பான்மை மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சியில் அவர்கள் ஆற்றிவரும் பங்களிப்பை பாராட்டி, மேலும் சிறப்பாக பணியாற்ற வாழ்த்தி ஊக்கமளிக்கும் உரையாற்றினர்.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட சுற்றுச்சூழல் கல்வித் திட்ட அலுவலரும் சுற்றுச்சூழல் ஆர்வலருமான முனைவர் ஜி.எஸ். விஜயலட்சுமி அவர்கள் மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் (EPFO) பிரிவு மேற்பார்வையாளர் திருமதி எஸ். சரஸ்வதி அவர்கள் கலந்து கொண்டு, பணியாளர்களின் அர்ப்பணிப்பை பாராட்டி ஊக்கமளிக்கும் வகையில் சிறப்புரையாற்றினர்.

மேலும், அமர் சேவா சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் திருமதி பட்டம்மாள் அவர்கள் மற்றும் அமெரிக்காவில் இருந்து வருகை தந்த திரு. அஸ்வத் நித்தியானந்தன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை யாற்றினர்.

விழாவையொட்டி பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காக பல்வேறு கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பொழுதுபோக்குநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற பணியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர்.

இந்நிகழ்ச்சி பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடையே மகிழ்ச்சியையும் ஒற்றுமை உணர்வையும் ஏற்படுத்தும் வகையில் சிறப்பாக அமைந்தது.

இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அமர் சேவா சங்கத்தின் மனிதவள மேம்பாட்டு பிரிவு தலைவர் திரு. விஸ்வநாதன் அவர்கள் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

நிகழ்ச்சியின் நிறைவில் அமர் சேவா சங்கத்தின் சிறப்பு ஆசிரியர் திருமதி கோமு அவர்கள் நன்றியுரையாற்றினார்.

விழாவின் அனைத்து நிகழ்ச்சிகளையும் அமர் சேவா சங்கத்தின் கிராமம் சார்ந்த மறுவாழ்வு பணியின் ஒருங்கிணைப்பாளர் திரு. இசக்கிமுத்து அவர்கள் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

தேசபக்தி

07.08.2026 வெள்ளிக்கிழமை

ஆட்சியர் வந்தனா கார்க் தலைமையில் ஆய்வுக் கூட்டம்:

# திருவண்ணாமலையில் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் தீவிரம்

## பள்ளிகள், மாணவர் விவரங்களை மறுஆய்வு செய்ய உத்தரவு

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை (PK BFS) மேலும் விரிவுபடுத்தும் பணிகளை விரைவுபடுத்தும் நோக்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் ஆய்வுக் கூட்டம் வியாழக்கிழமை மாவட்ட ஆட்சியர்அலுவலககூட்டரங்கில் நடைபெற்றது.



கூட்டத்தில், 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் உள்ள பள்ளிகளின் விவரங்களை முழுமையாக மறுஆய்வு செய்ய அனைத்து வட்டார இயக்க மேலாளர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர்அறிவுறுத்தினார். வட்டார வாரியாக பள்ளிகளின் எண்ணிக்கை, மாணவர் சேர்க்கை மற்றும் திட்டத்தில் புதிதாக இணைக்கப்படவுள்ள பள்ளிகளின் விவரங்களை துல்லியமாக ஆய்வு செய்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிட்டார்.

மேலும், ஒவ்வொரு பள்ளியிலும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை தலைமையாசிரியரின் கையொப்பத்துடன் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும் என்றும், புதியதாக காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள பள்ளிகளில் உள்ள சமையற்கூடங்களின் வசதி, கட்டிடங்களின் நிலை, பழுதுநீக்கம் தேவைப்படும் அம்சங்கள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் நேரில் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

திட்டம் விரிவாக்கப் பணிகள் காலதாமதமின்றி நடைபெற வேண்டும் என்றும், மாணவர்கள் தரமான மற்றும் சத்தான காலை உணவை தடையின்றி பெறுவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு ஆட்சித்தலைவர்வலியுறுத்தினார். இந்தஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் பூ. காஞ்சனா, முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமித்ஷா வருகை:

# திருவண்ணாமலையில் பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாட்டு பணிகள் தீவிரம்

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா வருகிற 9ஆம் தேதி திருவண்ணாமலைக்கு வருகை தர உள்ளதை முன்னிட்டு, மாவட்டம் முழுவதும் பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாட்டு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஹெலிகாப்டர் தரையிறங்கும் இடம், சாலை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அமித்ஷா, இரண்டு நாள் பயணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு வருகிறார். வருகிற 8ஆம் தேதி புதுச்சேரி சென்றடைந்து, அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். தொடர்ந்து 9 ஆம் தேதி காலை ஜிப்மர் மருத்துவமனையில் நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிறகு, ஹெலிகாப்டர் மூலம் திருவண்ணா மலை செங்கம் சாலையில் அமைந்துள்ள கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி மைதானத்திற்கு வருகிறார்.

அங்கிருந்து கார் மூலம் பகவான் ஸ்ரீ ரமணாசிரமத்திற்குச் சென்று, சிறப்பு பூஜை மற்றும் வழிபாட்டில் பங்கேற்க உள்ளார். பின்னர் மீண்டும் கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி மைதானத்திற்குத் திரும்பி, அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் சென்னை புறப்படுகி றார்.

இந்த பயணத்தை முன்னிட்டு, திருவண்ணா மலை மாவட்ட ஆட்சியர் வந்தனாகார்க்தலைமையில்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உதயகுமார் மற்றும் வருவாய், காவல், நெடுஞ்சாலை, மருத்துவம், தீயணைப்பு உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் ஒருங்கிணைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேட், ரமணாசிரமம், கிரிவலப் பாதை, வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் முக்கிய சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பாதுகாப்பு ஏற்பாடுகளில் எந்த வித குறையும் இருக்கக் கூடாது என அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.





மேலும், அமைச்சரின் வருகையையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முக்கிய சாலைகள், சந்திப்புகள் மற்றும் வழிபாட்டு தலங்களில் கூடுதல் காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் போக்குவரத்து மாற்று ஏற்பாடுகளும் திட்டமிடப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.





# திண்டுக்கல்லில் இருசக்கர வாகனத்தில் வைத்து சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த நபர் கைது

## 21 மதுபான புட்டிகள், ரூ.1,500 பணம், இருசக்கர வாகனம் பறிமுதல்

திண்டுக்கல் நகர் DSP. கார்த்திக் உத்தரவின் பேரில் நகர் தெற்கு காவல் நிலைய ஆய்வாளர் இளஞ்செழியன் தலைமையில் சார்பு ஆய்வாளர் ஜான்சன் மற்றும் காவலர்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது தீயணைப்பு நிலைய ஜங்ஷன் அருகே சட்ட விரோதமாக இருசக்கர வாகனத்தில் மறைத்து வைத்து மதுபானம் விற்பனை செய்த முத்தழகு பட்டியை சேர்ந்த ஜெயபால்(44) என்பவரை கைது செய்து அவரிடமிருந்து 21 மதுபான புட்டிகள், ரூ.1,500 பணம், இருசக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# கூடலூர் அம்மா உணவகத்தில் தரம் குறைந்த உணவு

## மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை

தேனி மாவட்டம் கூடலூர் நகராட்சி பகுதியில் ஏழை, எளிய மக்களின் பசி போக்கும் வகையில் அம்மா உணவகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு காலையில் இட்லி, பொங்கல், சாம்பாரும், மாலையில் சாம்பார் சாதம், எலுமிச்சை சாதம், தயிர் சாதமும், இரவில் சப்பாத்தியும் மக்களுக்கு மலிவு விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. முன்புசுவையாகவும் தரமாகவும் வழங்கப்பட்டு வந்த இந்த உணவு, தற்போது நகராட்சி நிர்வாகத்தின் மூலம் மளிகைப் பொருட்களும் காய்கறிகளும் வழங்க தொடங்கிய பிறகு அதன் தரம் மிகவும் குறைந்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பொதுவாக, நகராட்சி பகுதிகளில் உள்ள அம்மா உணவகங்களில் தினமும் காலையில் சுகாதார ஆய்வாளர்கள் நேரில் சென்று உணவின் தரம் மற்றும் அளவை ஆய்வு செய்வது வழக்கம். ஆனால், கூடலூர் நகர் பகுதியில் உள்ள அம்மா உணவகத்தில் அத்தகைய ஆய்வுகள் எதுவும் நடப்பதாக தெரியவில்லை என பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். இங்கு வழங்கப்படும் சாம்பாரில் எந்தவித சுவையும் இருப்பதில்லை என்றும், அதுவும் மிகவும் குறைந்த அளவே வழங்கப்படுவதாகவும் உணவருந்த வரும் மக்கள் புகார் கூறுகின்றனர். எனவே, உணவின்தரத்தைமீட்டெடுக்கவும், மக்களின் நலனை பாதுகாக்கவும் உணவுப் பாதுகாப்புத்துறை அதிகாரிகளும், சுகாதார ஆய்வாளரும், நகராட்சி ஆணையரும் உடனடியாக இந்த உணவகத்தில் நேரில் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். ஆய்வு செய்து முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க தேவையான உத்தரவுகளை மாவட்ட ஆட்சியர் பிறப்பிக்க வேண்டும் என கூடலூர் பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் மாவட்ட நிர்வாகத்திற்குகோரிக்கை விடுத்துள்ளனர்.

# பூந்தமல்லியில் 09 கிலோ கஞ்சா பறிமுதல் : குற்றவாளி கைது




ஆவடி காவல் ஆணையரகத்தில் போதைப்பொருள் இல்லாதமிழகம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவுபடியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர்.சிவகுமார் மேற்பார்வையில், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் உதவி ஆணையாளர் களியசுந்தரம் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்க பிரிவு காவல் ஆய்வாளர் பிரபு தலைமையிலான போலீசார் கஞ்சா விற்பனை தொடர்பான ரகசிய தகவலின் பேரில் பூந்தமல்லி பைபாஸ் பஸ் டிப்போ அருகே கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக சுற்றித்திரிந்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பர்ஷு காரா (வ/30) என்பவரிடம் விசாரணை மேற்கொண்டு சோதனை செய்ததில் சுமார் 9 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து எதிரியை கைது செய்து பூந்தமல்லி மதுவிலக்கு அமலாக்க பிரிவில் வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# ஆக.15 அன்று அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம்

தென்காசி மாவட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுதந்திர தினமான 15.08.2026 அன்று கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளதுஎன்றுமாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 3 மற்றும் சென்னை ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் துறை ஆணையர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, சுதந்திர தினமான 15.08.2026 அன்று காலை 11.00 மணிக்கு தென்காசி மாவட்டத்தில் ள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம் நடைபெற உள்ளது. இக்கிராம சபை கூட்டத்தில் கூட்டப் பொருள்களாக, கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், தூய்மையான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது குறித்து விவாதித்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் II சிறுபாசன குளங்கள் மற்றும் ஏரிகள் புதுப்பித்தல், ஜல் ஜீவன் திட்டம், தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம் மற்றும் இதர பொருள்கள் குறித்தும் விவாதிக்க ப்பட உள்ளது.

கிராம ஊராட்சிகளில் நடைபெறும் இக்கிராம சபைக் கூட்டத்தினை கண்காணிக்க மாவட்ட அளவிலான உதவி இயக்குநர் நிலை அலுவலர்கள் மற்றும் வருவாய் வட்டாட்சியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கிராம சபை கூட்டங்களில் கிராம ஊராட்சிகளின் அனைத்து பொதுமக்களும் கலந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத்சிங்தெரிவித்துள்ளார்.

செய்யாறு அருகே பள்ளி வேன் கவிழ்ந்து பரபரப்பு:

# 27 மாணவர்களில் 16 பேர் காயம் - 3 குழந்தைகள் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு மாற்றம்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே உள்ள சுமங்கலி பகுதியில் மாணவர்களை ஏற்றிச் சென்ற தனியார் பள்ளி வேன் சாலை ஓர பள்ளத்தில் கவிழ்ந்ததில் 16 மாணவர்கள் காயமடைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.










தனியார் பள்ளிக்கு சொந்தமான வேன், சுமங்கலி, குண்ணத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 27 மாணவர்களை ஏற்றிக்கொண்டு பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தது.

அப்போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த வேன் சாலை ஓர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 16 மாணவர்கள் காயமடைந்தனர். அவர்களில் லேசான காயம் அடைந்த 13 மாணவர்களுக்கு வெம்பாக்கம் அரசு மருத்துவமனையில் உடனடி சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், கூடுதல் சிகிச்சைக்காக 3 மாணவர்கள் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். விபத்து குறித்து தகவல் அறிந்த பொதுமக்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் விரைந்து சென்று வேனில் சிக்கியிருந்த மாணவர்களை பாதுகாப்பாக மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து தூசி காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து, வேன் விபத்துக்கான காரணம் குறித்துதீவிரவிசாரணைமேற்கொண்டு வருகின்றனர். பள்ளி மாணவர்களை ஏற்றிச் சென்ற வேன் விபத்துக்குள்ளான சம்பவம் செய்யாறு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# மோரை ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் ஆடிகிருத்திகை விழா





மாதவரம் தொகுதி மோரை ஊராட்சி வீராபுரம் பகுதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீதண்டாயுதபாணி சுவாமி ஆலயத்தில் 56ஆம் ஆண்டு ஆடிமாத கிருத்திகை திருவிழா ஆலய நிர் வாகிகள் ஆதிகேசவலு, ரெஜினா அவினா கிருஷ்ணன், முன்னாள் மோரை ஊராட்சி மன்ற தலைவர் திவாகரன், பெருமாள், கீதாகிரிபாபு, பாலசுப்ரமணியன், ராஜன் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கைலாய வாத்தியம்,தாரத் தப்பட்டை முழங்க கணபதி பூஜை, கோபூஜையுடன் சுவாமிக்கு பால் அபிஷேகம் மற்றும் கலச அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டுதூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.இதனைத் தொடர்ந்து ஸ்ரீசுப்பிரமணியசுவாமி ஸ்ரீ வள்ளி தேவசேனா உற்சவர்கள் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வான வேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.

மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதாளம் வழங்கினர்.



பழனியில் நடைபெற்ற தவெக ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் புகைப்படத்தை அவமரியாதை செய்த தவெக நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி புகார் அளிக்க பழனி நகர் காவல் நிலையத்தில் குவிந்த திமுகவினர். பழனி நகர காவல் ஆய்வாளர் அவர்களிடம் நடவடிக்கை எடுக்க புகார் மனு அளிக்கப்பட்டது

### ஆடி கிருத்திகையில் ஆன்மிக அலை:

# கூழமந்தல் நட்சத்திர விருட்ச விநாயகர் கோயிலில் திரளான பக்தர்கள் தரிசனம்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே உள்ள கூழமந்தல் அருள்மிகு நட்சத்திர விருட்ச விநாயகர் திருக்கோயிலில், ஆடி மாத கிருத்திகை நட்சத்திரத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் கோலாகலமாக நடைபெற்றன. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்து அருள் பெற்றனர்.



விழாவையொட்டி, கிருத்திகை நட்சத்திர அதிதேவதைக்கும், கிருத்திகை நட்சத்திர விருட்சத்திற்கும் சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் மகாதீபாராதனை நடைபெற்றது. தொடர்ந்து அருள்மிகு நட்சத்திர விருட்ச விநாயகர், ருத்ராட்ச லிங்கேஸ்வரர், வள்ளி – தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி, 27 நட்சத்திர அதிதேவதைகள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு பால், பன்னீர், சந்தனம் உள்ளிட்ட பல்வேறு திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு, மலர் அலங்காரத்துடன் மகா தீபாராதனை நடைபெற்றது. கிருத்திகை நட்சத்திரத்தில் பிறந்த பக்தர்கள் தங்களது நட்சத்திர அதிதேவதையையும், நட்சத்திர விருட்சத்தையும் பக்தி பூர்வமாக வழிபட்டு, குடும்ப நலன், ஆரோக்கியம், கல்விமுன்னேற்றம், தொழில் வளர்ச்சி, திருமண யோகம் மற்றும் செல்வ வளம் பெருக இறைவனை வேண்டி சிறப்பு அர்ச்சனைகளில் பங்கேற்றனர்.

ஆன்மிக எழுச்சியுடன் நடைபெற்ற இந்த விழாவில் செய்யாறு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். வழிபாட்டின் நிறைவில் பக்தர்களுக்கு பிரசாதம்வழங்கப்பட்டதுடன், அனைவருக்கும் அன்னதானமும் சிறப்பாக நடைபெற்றது. கோயில் முழுவதும் பக்தர்களின் "அரோகரா" முழக்கத்தால் ஆன்மிக பரவசம் நிலவியது.

# திருவண்ணாமலையில் கூட்டுறவுத்துறை பணியாளர்களுக்கான சிறப்பு குறைதீர் முகாம்

## 18 வட்டாரங்களில் மனுக்கள் பெற ஏற்பாடு; இணைப்பதிவாளர் எஸ். பார்த்திபன் தகவல்

திருவண்ணாமலை மண்டலத்தில் கூட்டுறவுத்துறையில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களின் கோரிக்கைகள் மீது விரைவான நடவடிக்கை எடுக்கும் நோக்கில், சிறப்பு குறைதீர் முகாம் இன்று (ஆகஸ்ட் 7) 18 வட்டாரங்களில் ஒரே நேரத்தில் நடத்தப்பட உள்ளதாக மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் எஸ். பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் வழங்கிய வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமையும் இத்தகைய குறைதீர் முகாம் நடத்தப்பட்டு, பணியாளர்களின் கோரிக்கைகள் நேரடியாகப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதன்படி, திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர், துரிஞ்சாபுரம், செங்கம், புதுப்பாளையம், தண்டராம்பட்டு, போளூர், கலசப்பாக்கம், சேத்துப்பட்டு, ஜமுனாமரத்தூர், செய்யாறு, அனக்காவூர், ஆரணி (கிழக்கு), ஆரணி (மேற்கு), தெள்ளார், பெரணமல்லூர், வந்தவாசி மற்றும் வெம்பாக்கம் உள்ளிட்ட 18 வட்டாரங்களில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சார்பதிவாளர்கள் மற்றும் கள அலுவலர்கள் முன்னிலையில் மனுக்கள் பெறப்பட உள்ளன.

இந்த சிறப்பு முகாமில் கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தங்களது கோரிக்கைகள், பணியியல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் குறைகளை மனு வடிவில் நேரடியாக அளிக்கலாம். பெறப்படும் மனுக்கள் மீது துறை விதிமுறைகளின்படி உரிய பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

இன்று பிற்பகல் 1 மணி வரை மனுக்கள் பெறப்படும் என்பதால், கூட்டுறவுத்துறையுடன் தொடர்புடைய அனைத்து பணியாளர்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தங்களது கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட கூட்டுறவு சார்பதிவாளர்களிடம் நேரில் அளித்து பயன்பெறுமாறு மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் எஸ். பார்த்திபன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### கே.ஜி.எஃப் அஸ்வத் லேஅவுட் எக்ஸ்டென்ஷன்:

# பௌர்லால் பெட் பகுதியில் சாலையின் நடுவே திறந்த கால்வாய்; பொதுமக்கள் கடும் அவதி

## உடனடி நடவடிக்கை கோரி கோரிக்கை

கே.ஜி.எஃப் நகரின் அஸ்வத் லேஅவுட் எக்ஸ்டென்ஷன், பௌர்லால் பெட் பகுதி முக்கியமான போக்குவரத்து சாலையாகும். இந்தச் சாலையை தினமும் நூற்றுக்கணக்கான இருசக்கர வாகனங்கள், கார்கள், பள்ளி மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் அவசர மருத்துவ சேவை வாகனங்கள் பயன்படுத்தி வருகின்றன. ஆனால், கழிவுநீர் வெளியேறுவதற்காக சாலையின் நடுப்பகுதியில் தோண்டப்பட்ட கால்வாய் மற்றும் குழி அமைக்கும் பணி முழுமையாக முடிக்கப்படாமல் நீண்ட நாட்களாக அப்படியே விடப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். இதன் காரணமாக கால்வாயில் செல்ல வேண்டிய கழிவுநீர் சாலையின் மேற்பரப்பில் தேங்கி நிற்கிறது. துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதார சீர்கேடும் ஏற்பட்டு, அந்த வழியாக செல்லும் பொதுமக்கள் தினமும் கடும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர். மழை பெய்யும் நேரங்களில் நிலைமை மேலும் மோசமடைகிறது. சாலையில் தண்ணீர் தேங்கி குழி இருப்பது தெரியாமல் இருசக்கர வாகன ஓட்டிகள் தடுமாறி விபத்துக்குள்ளாகும் அபாயம் நிலவுகிறது.



குறிப்பாக முதியவர்கள், பெண்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் மிகுந்த அச்சத்துடன் அந்தப் பாதையை கடந்து செல்கின்றனர். இந்தச் சாலை வழியாக மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளிகள், பள்ளிகளுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்லும் பொது மக்கள் அனைவரும் தினமும் பெரும் அவதிக்குள்ளாகி வருவதாக அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட துறையினர் பணியை பாதியிலேயே நிறுத்தாமல், உடனடியாக சாலையை முழுமையாக சீரமைத்து, கழிவுநீர் சீராக செல்லும் வகையில் நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

சிறிய அலட்சியம் கூட எதிர்காலத்தில் பெரிய விபத்துகளுக்கும், உயிரிழப்புகளுக்கும் வழிவகுக்கக்கூடும் என்பதால், எந்த அசம்பாவிதமும் நடைபெறுவதற்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து சாலையை பாதுகாப்பான முறையில் சீரமைக்க வேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் ஒருமித்த கோரிக்கையாக உள்ளது.


"மக்களின்பாதுகாப்பே முதன்மை – அஸ்வத் லேஅவுட் எக்ஸ்டென்ஷன் சாலையை உடனடியாக சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் வலியுறுத்தல்."

# திருவள்ளூர் ஜே.என்.சாலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகள் நலத்துறை சார்பில் உலக தாய்ப்பாலுட்டும் வார விழா




திருவள்ளூர் ஜே.என். சாலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகள் நலத்துறை சார்பில் உலக தாய்ப்பாலூட்டும் வார விழாவை யொட்டி நிலையான வாழ்க்கைக்கு தாய்ப்பாலே தொடக்கம், வலுப்படுத்துவோம் அதன் வழிமுறைகளை என்ற கருப்பொருளை வலிவுறுத்தும் விதமாக மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தலைமையில் அனைவரும் விழிப்புணர்வு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.மோகன்காந்தி, மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.சுரேஷ் பாபு, நிலைய மருத்துவ அலுவலர் மரு.ராஜ்குமார், மருத்துவக் கல்லூரி துணை முதல்வர் (பொ) மரு.அனிதா, துறை தலைவர் (குழந்தைகள் நலப்பிரிவு) பேராசிரியர் மரு. ஸ்ரீதேவி, தனியார் தொண்டு நிறுவன மண்டல செயலாளர் கே. பழனி, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# திண்டுக்கல் மாவட்டம் பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்..!

வெறும் வதந்தி (புரளி) என்பது காவல்துறையினர் நடத்திய தீவிர சோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

போலி மிரட்டல் விடுத்த நபரைக் காவல்துறையினர் உடனடியாகக் கைது செய்துள்ளனர். தற்போது கோயிலைச் சுற்றி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

### திருவண்ணாமலையில்

# பணிபுரியும் பெண்கள், மாணவியருக்கு பாதுகாப்பான தங்குமிடம்

## 'தோழி' விடுதியைப் பயன்படுத்த மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அழைப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 'தோழி' மகளிர் விடுதியின் பாதுகாப்பான, தரமான மற்றும் குறைந்த செலவிலான தங்குமிட வசதிகளை பணிபுரியும் பெண்கள், மாணவியர் மற்றும் பயிற்சி, உயர்கல்வி, நேர்காணல் உள்ளிட்ட தேவைகளுக்காக மாவட்டத்திற்கு வருபவர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்என்றுமாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் சார்பில், தமிழகம் முழுவதும் 21 மாவட்டங்களில் 25 'தோழி' விடுதிகள் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. பாதுகாப்பான மற்றும் வசதியான தங்குமிடங்களை வழங்கும் இந்தத் திட்டம் மூலம் ஆயிரக்கணக்கான பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

திருவண்ணாமலையில் கடந்த 21.05.2025 அன்று தொடங்கப்பட்ட 'தோழி' விடுதி, 132 படுக்கை வசதிகளுடன் பணிபுரியும் பெண்கள் மற்றும் மாணவியருக்கு பாதுகாப்பான தங்குமிடமாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த விடுதியில் பயோமெட்ரிக் நுழைவு முறை, 24 மணி நேர பாதுகாப்பு, கண்காணிப்பு கேமரா (CCTV), WIFI வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், தரமான உணவு, பகல்நேர குழந்தைகள் பராமரிப்பு மையம், சுடுநீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் மற்றும் பொழுதுபோக்கு அறை உள்ளிட்ட நவீன வசதிகள் குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.



மேலும், திருவண்ணாமலை மற்றும் சுற்றுவட்டார கல்வி நிறுவனங்கள், அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவியர், அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் மட்டுமின்றி, பயிற்சி, போட்டித் தேர்வு, உயர்கல்வி, நேர்காணல் மற்றும் அலுவல் பணிகளுக்காக திருவண்ணாமலைக்கு வருகை தரும் பெண்களும் இந்த விடுதியை பாதுகாப்பாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார். தோழி விடுதி முகவரி: எண்.81, ராஜீவ் காந்தி நகர், செங்கம் சாலை, சிம்மதீர்த்தம் எதிரில், திருவண்ணாமலை. தொடர்புக்கு: 97911 71931.



பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுவிக்கப்பட்டது தொடர்ந்து கோவில் வளாகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு காவல்துறையின தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன

# குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறப்பு கண்காணிப்பு குழு அமைக்க மதுரை உயர் நீதிமன்றம் உத்தரவு

குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறப்பு கண்காணிப்பு குழு அமைக்க உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு உத்தரவிட்டுள்ளது.



தென்காசியை சேர்ந்த கிருஷ்ணசாமி என்பவர், தாக்கல் செய்த மனுவில், 'குற்றாலம் அருவிக்கு குளிக்க வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொது மக்களுக்கு போதுமான பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்கும், சுகாதாரத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் சட்டவிரோத செயல்களை தடுக்கவும் உத்தரவிட வேண்டும்' என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஆர்.சக்திவேல் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தென்காசி மாவட்ட ஆட்சியர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், 'குற்றாலநாதசுவாமி கோயில் மற்றும் அருவியைச் சுற்றியுள்ள 152 தற்காலிக கடைகள் ஆய்வு செய்யப்பட்டது. இதில், 80 கடைகள் மட்டுமே ஏலம் அல்லது ஒதுக்கீட்டுக்கு அனுமதிக்கப்படும்.

மீதமுள்ள 72 கடைகள் பாதுகாப்பு, பக்தர்கள்மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி ஏலத்தில் சேர்க்கப்படாது. மேலும், தீ விபத்து ஏற்பட்ட தெற்கு வெளிப் பிரகார பகுதியில் இருந்த 62 கடைகள் அகற்றப்பட்டு அங்கு கோயில் நந்தவனம் அமைக்கப்படும். மற்றொரு பகுதியில் 10 கடைகள் இருந்த இடம் வாகன நிறுத்துமிடமாக மாற்றப்படும்.

ஏலத்தில் விடப்படும் 80 கடைகளில் எரிவாயு சிலிண்டர், மர விறகு பயன்படுத்தி சமையல் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டு, தீ அபாயம் இல்லாத பொருட்கள் மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்கப்படும்' எனக் கூறப்பட்டிருந்தது. இதையடுத்து நீதிபதிகள், "நந்தவனத் திட்டம் தொடர்பாக விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். குற்றால சீசனை முன்னிட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறப்பு கண்காணிப்பு குழுவை அமைத்து, கூட்ட நெரிசல், மருத்துவ வசதிகள், வாகன போக்குவரத்து, தீ விபத்து தடுப்பு உள்ளிட்ட அம்சங்களை தொடர்ந்து கண்காணிக்க ஆட்சியர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை ஆக.24ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.



சார் பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன் சிபிசிஐடி காவல்துறையால் கொடைக்கானலில் கைது செய்யப்பட்டு தற்போது திண்டுக்கல் சிபிசிஐடிய அலுவலகத்திற்கு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டார்

# சின்னமனூர் வாரச்சந்தையில் கைவரிசை காட்டும் பிக்பாக்கெட் திருடர்கள்

## கண்காணிப்பை தீவிரப்படுத்த காவல்துறைக்கு பொதுமக்கள் கோரிக்கை


தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சியை ஒட்டி அமைந்துள்ள வாரச்சந்தையில்நாளுக்கு நாள் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் பொருட்களை திருடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன குறிப்பாக வியாழக்கிழமைகளில் நடைபெறும் இந்த வாரச் சந்தைக்கு சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து ஏராளமான பொதுமக்கள் காய்கறிகள் மளிகை பொருட்கள் பழங்கள் வாங்க வருகை தருகின்றனர் .



இதில் மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலான நேரத்தில் மக்கள் கூட்டம் மிக அதிகமாக இருக்கும் சூழலைப் பயன்படுத்தி, மர்ம நபர்கள் தங்கள் கைவரிசையை காட்டி வருகின்றனர். சந்தைக்கு வந்த ஏழைப் பெண் ஒருவர் தனது செல்போனை பையில் வைத்து தொலைத்துவிட்டு, அழுது புலம்பிய சம்பவம் அங்கு வந்தோரை சோகத்தில் ஆழ்த்தியது. பதறியடித்தபடி பக்கத்தில் இருந்தவரின் போனை வாங்கித் தனது எண்ணிற்கு தொடர்பு கொண்டபோது, அது உடனடியாக 'சுவிட்ச் ஆப்' செய்யப்பட்டு இருந்தது உறுதி செய்யப்பட்டது. வறுமையின் காரணமாக தனது வாழ்வாதார சேமிப்பில் வாங்கிய போனைப் பறிகொடுத்த அந்தப் பெண், சந்தை நடுவே கண்ணீர் விட்டு அழுத காட்சி அங்கிருந்தோரை பரிதாபப் பட வைத்தது. இது குறித்து சந்தை வியாபாரிகள் கூறுகையில், கூட்டம் அதிகமிருக்கும் நேரத்தை குறிவைத்து தொடர்ச்சியாக இத்தகைய சம்பவங்கள்நடந்து வருவதாக வேதனையுடன் தெரிவித்தனர். எனவே, நகராட்சியை ஒட்டி அமைந்திருக்கும் இந்த சின்னமனூர் வாரச் சந்தையில், கூட்டம் அதிகமாக காணப்படும் மாலை நேரத்தில் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக, வியாழக்கிழமைகளில் 3 மணி முதல் 6 மணி வரை காவல்துறையினர் கூடுதலாக பாதுகாப்பு பணியில் ஈடுபட வேண்டும் என்றும், திருட்டு சம்பவங்களை தடுக்க கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும் என்றும் வாரச்சந்தை வியாபாரிகள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சின்னமனூர் காவல்துறைக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாடியநல்லூர் மொண்டியம்மன் நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 11ஆம் ஆண்டு ஆடி திருவிழா

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் முத்துமாரியம்மன் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 11ஆம் ஆண்டு ஆடிமாத திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.



நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் பால்குடம் எடுத்தல், காப்புகட்டுதல், அம்மனுக்கு பால் உள்ளிட்ட பல்வேறு வாசனைதிரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கையுடன் திருவீதி உலா நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை, சுமங்கலி பூஜை போன்றவை வெகு சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம்மற்றும்உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு நெய்தீபம் ஏற்றி, பொங்கல் வைத்து, அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் பக்தர்களுக்கு மங்கள பொருட்கள் பிரசாதமாக வழங்கப்பட்டது.



உலகப் புகழ்பெற்ற பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோவில் வளாகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, காவல்துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

# வேடசந்தூர் அருகே வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியிடம் 3பவுன் செயினை பறித்த குற்றவாளி

## நான்கு மணி நேரத்தில் விரட்டி பிடித்த வேடசந்தூர் துணை கண்காணிப்பாளரின் தனிப்படையினர்

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் தாலுகா பாகாநத்ததை சேர்ந்த லவக்கம்மாள்(75) வீட்டில் தனியாக இருந்துள்ளார் அப்போது அந்த வழியாக வந்த சுள்ளெரும்பு நடுப்பட்டி சேர்ந்த பொன்ராஜ் மூதாட்டியை துண்டால் கழுத்தை நெறித்து மூன்று பவுன் தங்கச் செயினை பறித்து சென்றுள்ளார் இந்த சம்பவம் குறித்து வேடசந்தூர் துணை கண்காணிப்பாளர்சுரேஷ்பாண்டியன் அவர்களுக்கு தகவல் கிடைத்ததின் பேரில் எரியோடு ஆய்வாளர் வினோதா மற்றும் வேடசந்தூர் துணை கண்காணிப்பாளரின் தனிப் படை போலீசார் 4மணி நேரத்தில் குற்றவாளியை பிடித்து நகையை மூதாட்டியிடம் ஒப்படைத்தனர்



# நந்தன் கால்வாய் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்த எதிர்ப்பு: ஆர்.டி.ஓ.விடம் விவசாயிகள் மீண்டும் மனு

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள நந்தன் கால்வாய்திட்டத்திற்காக விவசாய நிலங்களை கையகப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து, பாதிக்கப்படும் விவசாயிகள் சார்பில் வருவாய் கோட்ட அலுவலர் (நில எடுப்பு) அலுவலகத்தில் மீண்டும் ஆட்சேபனை மனு அளிக்கப்பட்டுள்ளது.



நந்தன் கால்வாய் திட்டத்தால் பாதிக்கப்படும் விவசாயிகள் அளிக்கப்பட்டமனுவில்,திட்டத்திற்காக விவசாய நிலங்களை கையகப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.மனுவில் கூறப்பட்டு ள்ள தாவது:

நந்தன் கால்வாய் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக ஏற்கனவே ஆட்சேபனை மனு அளிக்கப்பட்ட நிலையில், அதுகுறித்த விசாரணைக்காக அதிகாரிகள் அலுவலகத்தில் ஆஜராகுமாறு விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட உள்ள நிலங்களே பாதிக்கப்படும் விவசாயிகளின் குடும்பங்களின் ஒரே வாழ்வாதாரமாக உள்ளதாகவும், பல தலைமுறைகளாக அந்த நிலங்களில் விவசாயம் செய்து குடும்பங்களை நடத்தி வருவதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நிலங்களை கையகப்படுத்தினால், விவசாயிகளின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்படுவதுடன், நில உரிமையாளர்களாக உள்ள அவர்கள் கூலித் தொழிலாளர்களாக மாறும் நிலை உருவாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நந்தன் கால்வாய்திட்டத்திற்காக தங்களது விவசாய நிலங்களை வழங்க விருப்பமில்லை என்றும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையை மறுபரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

# இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை தேவை

## ஜெய்சங்கருக்கு முதல்வர் விஜய் கடிதம்

இலங்கை சிறையில் உள்ள அனைத்து மீனவர்கள், படகுகளை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு முதல்வர் விஜய் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் எழுதிய கடித்ததில், 'ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் 11 பேர் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு, படகும் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் குறித்து தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

இச்சம்பவத்தில் இயந்திரக் கோளாறால் படகு நெடுந்தீவு கரையை ஒட்டி தரைதட்டி நின்ற நிலையில், சர்வதேச கடல் எல்லையைத் தாண்டியதாக கூறி, படகு, மீனவர்களை சிறை பிடித்துள்ளனர்.

நமது மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து செய்து வருவது மீனவ சமூகத்தினரிடையே ஆழ்ந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்களின் வாழ்வாதாரத்தை பாதித்து பாக்ஜலசந்தியை நம்பி வாழும் மீனவர்களின் மத்தியில் நிலையற்ற தன்மையை உருவாக்கியுள்ளது.

எனவே, உரிய தூதரக வழிமுறைகள் வாயிலாக இலங்கை அரசுடன் பேசி, ஏற்கெனவே சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், அவர்கள் படகுகளையும் விரைவாக விடுவித்து, பாதுகாப்பாக தாயகம் திரும்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இப்பிரச்சினை குறித்து கூட்டு செயல்பாட்டுக்குழு மூலம் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை விரைவாக நடத்துவது மட்டுமே இது போன்ற பிரச்சினைகள் மீண்டும் மீண்டும் நிகழா வண்ணம் தீர்வு காண்பதற்கு உதவும்.

மீனவர்களின் வாழ்வாதாரம், நலன்களை பாதுகாக்க தாங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு தீர்வு காண வேண்டும்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA